2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம்தேதி திங்கட் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்

1.இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018-19 (8th SHPC) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Battery Operated Vehicle 10 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சமும் மற்றும் Light Commercial Vehicle 2 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு 11.20 இலட்சமும் மொத்தம் இரண்டு பணிகளுக்கு ரூ.29.20 இலட்சத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 1191/பி3/2019 நாள்: 21.01.2019 தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அனுமதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.29.20 இலட்சத்தில் மத்திய அரசு பங்குத் தொகை 35% (ரூ.10.22 இலட்சம்) மாநில அரசு பங்குத் தொகை 55% (ரூ.16.06 இலட்சம்) நகராட்சி பங்கு தொகை 10% (ரூ.2.92 இலட்சம்) நிதி முறைமையில் பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. ( இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Purchase of Battery Operated Vehicle (10Nos) | 18.00 |
| 2 | Purchase of light commercial Vehicle (2Nos) | 11.20 |
| | மொத்தம் | 29.20 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சி பங்கு தொகை 10% ( ரூ.2.92 இலட்சம்) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.53/2019/இ1)

2.இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள காம்பேக்டர் வாகனம் TN36AR3744 வாகனத்தின் கிளட்ச் பிளேட் ரிவர்ஸ் பேரிங், கிளட்ச் அசெம்ளி செட் போன்றவைகள் பழுதானதால் அவசர அவசியம் கருதி கிளட்ச் பிளேட் ரிவர்ஸ் பேரிங் மற்றும் கிளட்ச் அசெம்ளி செட் போன்றவற்றை புதிதாக மாற்றி பழுதுகளை செப்பனிட வேண்டியுள்ளது.

மேற்படி வாகனம; Ashok Leyland கம்பெனியின் வாகனம் என்பதால் மேற்படி பழுதுகள் T.V.Sundaram - Iyengar & sons Private Ltd. 129/2A Perode (Village) Sithode Erode -2 அவர்களிடம் அவசர அவசியம் கருதி பழுதுகளை செப்பனிட்டு கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.21520/- செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

பொது சுகாதாரப்பணிக்கான வாகனம் என்பதால்
செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.021/2019/எச்1)

3. ஈரோடு மாநகராட்சியின் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் பவானி நகராட்சி பகுதி மேட்டூர் பவானி சாலை வழியாக குடிநீர் குழாய் பதித்தல் பணியின் போது பவானி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பகிர்மான குழாய்கள், வீட்டு குடிநீர் குழாய்கள் மற்றும் நீருந்து குழாய்கள் ஆகியவற்றை மாற்றி அமைக்க ஏற்படும் திட்ட செலவினத்திற்காக ஈரோடு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், RWS Division, ஈரோடு அவர்களிடம் இருந்து சாலை சீரமைப்பு கட்டணமாக ரூ.30.00 இலட்சம் ( காசோலை எண்.143261, நாள்: 26.6.2018) வரப்பெற்று உள்ளது.

மேலும் தொப்பூர்-மேட்டூர்-பவானி சாலையில் பவானி நகராட்சியின் பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்கும் பணிக்கு சாலை சீரமைப்பு கட்டணமாக ரூ.1,15,000/-ஐ வங்கி வரைவோலையாக வழங்குமாறு கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) மராமரிப்பு, நெடுஞ்சாலை, ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். /2018/இவஅ2, நாள்: 28.12.2018ல் தெரிவித்துள்ளதற்கு இணங்க ரூ.1,15,000/-ஐ மேற்படி துறைக்கு குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பதிவு செய்யலாம்.

2) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 938/2018/இ1)

2019-ம்ஆண்டு ஜனவரி மாதம் 31-ம்தேதி வியாழக் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்

1 பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியான பணியாளர்கள் அனைவருக்கும் 2018-19 -ம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு நிறுவனமான கோ ஆப்டெக்ஸிடமிருந்து (The Handloom Weavers Co- Operative Society Ltd) வாங்கிக்கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.37, நாள்: 28.02.2018-ன்படி ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் மேற்படி நிறுவனத்திடமிருந்து சீருடைகள் கொள்முதல் செய்து பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.164531/- வழங்க கேட்டு மேற்படி நிறுவனத்தாரால் கேட்பு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

2. பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் காலணி பெற தகுதியான துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் 2018-19 ஆம் ஆண்டிற்கு காலணிகள் அரசு நிறுவனமான Tamilnadu khadi and Village Industries Board, Chennai, அவர்களிடமிருந்து ( Khadi kraft) வாங்கிக்கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 280, நாள்: 08.10.2018-ன்படி ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் மேற்படி நிறுவனத்திடமிருந்து காலணிகள் கொள்முதல் செய்து பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ. 16443/- வழங்க கேட்டு மேற்படி நிறுவனத்தாரால் கேட்பு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1687/2018/எச்1)

3. பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் முதிர்ந்த கொசுக்களை அழித்திட உபயோகப்படுத்தப்படும் Kissan Kraft - புகைத் தெளிப்பான் இயந்திரங்கள் மூன்று எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்க ஏற்கனவே மன்றம் தனது நகர்மன்ற தீர்மான எண். 281 நாள்: 08.10.2018-ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் 29.1.2019 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பின்வரும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | MSP Pest Control Services 45, 2nd Floor, Senthan kandan complex, Gobichettipalayam. | Rs.9250/- |
| 2 | Sri Krisha Agro Agencies 12, EVK Sampath Road, Erode. | Rs.9380/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள MSP Pest Control Services Gobichettipalayam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்கலாம்.

குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்தினரிடம் பழுதுகள் செப்பனிட்டு கொள்ள மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.1875/2018/எச்1)

4. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வரையிலான பகுதிகளில் நீருந்து குழாய்கள் பகிர்மான குழாய்கள் உப்பு நீர் குழாய் ஆகியவற்றில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் உடைப்புகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு மதிப்பீடு 1.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். நாள்: 18.12.2018 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 03.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.சி.சின்னுசாமி | 1,50,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.26% |
| 2 | திரு.எம். முருகேசன் | 1,50,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விடஅதிகம் 1.33% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.26% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சின்னுசாமி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2080/2018/இ1)

5.இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் 2018-2019 ஆம் ஆண்டில் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வர பயணப்படி உத்தேச செலவினம் ரூ.100000/-க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.28 நாள்: 28.02.2018-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைவிட 2018-2019 ஆம் ஆண்டிற்கு கூடுதலாக தேவைப்படுவதால் கூடுதல் செலவினத் தொகை ரூ. 50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 292/2017/பி1)

6. பவானி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-19 ன் கீழ் குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை ( 33556m3) Bio mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.221 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -05 அவர்களின் கடித ந.க.எண். 22866/பி3 /2018 நாள்: 23/08/2018-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளர்

நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை. அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி கடித ந.க.எண். 18281/2016/Do1 நாள்: 24.08.2018-ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருவாளர் Sree Bommu Industries Coimbatore அவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து 22.10.2018-ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதத்தின் நிபந்தனைகளில் மேற்கண்ட பணியின் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய ஒவ்வொரு பணியின் நிலைப்பட்டியலுக்கும் அரசு பொறியியல் கல்லூரி அல்லது அண்ணா பல்கலைக்கழகம் அவர்களின் மூலம் Survey செய்யப்பட்ட வேலையின் அளவின் அறிக்கை பெற்று ( Third party Verification) தொகை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே ( Centre for Environmental Studies அண்ணா பல்கலைக்கழகம் சென்னை அவர்களை Project Management Consultant ( PMC) மற்றும் Quantity survey work ஆகிய பணிகளுக்கு நியமனம் செய்து பணியை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2 பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

7. பவானி நகராட்சி அனைத்து நகர பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யக்கூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் Gas Chlorination Plant அமைக்கப்பட்டு Chlorination செய்யப்பட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. எனவே 2019 -20 ஆம் நிதியாண்டிற்கு Chlorination பணிக்கு அவ்வப்பொழுது தேவைப்படும் சமயங்களில் Gas Chlorine சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2019 -20 ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

8. பவானி நகராட்சிக்கு தீனதயாள் அந்தியோதயா யோஜானா திட்டத்தின் கீழ் ( DAY -NULM) ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் பவானி அரசு மருத்துவணை வளாகத்தில் உட்புற நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை ( Special Shelter) கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிட வரைபடம் ( Building Plan) தயாரித்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர் ஸ்ரீ அங்காளம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. கட்டிடம் கட்ட அனுமதி கோரி கட்டிய வரைபடத்தினை நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் வரைபடத்தில் சில மாற்றங்கள் செய்து கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதிற்கிணங்க தற்பொழுது வரைபடத்தினை மாற்றங்கள் செய்து அனுப்பப்பட்டு செயல்முறையில் உள்ளது.

எனவே அனுமதி பெற இருக்கும் வரைபடத்திற்கு வடிவமைப்பு ( Design) அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் சேலம் அவர்களிடம் பெற்று பணியை மேற்கொள்ளலாம் இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

9. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள காவிரி குடிநீர் மற்றும் பிற பயன்பாட்டிற்கு பயன்படும் ஆழ்துளை கிணறு தண்ணீரின் நீருந்து குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் கசிவுகளை உடனுக்குடன் சரிபார்த்து பொது மக்களுக்கு தங்குதடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2019-20 ஆம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2019 - 20-ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

10. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக அறிவிக்க, பவானி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் அனைத்து கழிப்பிடங்களையும் 6 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய ஆய்வுக்குழு வந்து செல்வார்கள் அதன் அடிப்படையில் அனைத்து கழிப்பிடங்களில் உள்ள பழுதுகள் மற்றும் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொது மக்கள் தடையின்றி பயன்டுத்தும் வகையில் செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

11. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு காவேரி ஆற்று நீரை சுத்திகரிப்பு செய்ய படிகாரம் ( ALUM) சுமார் 12.00 மெ.டன் வாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் இருப்பில் வைத்து பயன்படுத்தி கொள்ள வேண்டியுள்ளது. 2019-20 ஆம் நிதியாண்டிற்கு படிகாரம் கொள்முதல் செய்யவும், இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.குடிநீர் நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

12. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தண்ணீர் வசதிக்காக பயன்டுத்திவரும் மினிபவர் பம்புகள், பவர் பம்புகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தும் ஏர்கம்பரசர்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2019-20 ஆம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

13. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் மழைநீர் கால்வாயில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

14. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள பிற உபயோகங்களுக்கு பயன்படும் ஆழ்துளை கிணற்று நீரின் நீரேற்று குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

15. பவானி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 26, மெயின்ரோடு கிழங்கு கடை சந்து அருகில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் நிலையத்தில் மராமத்து பணிகள் செய்ய ரூ.2.25 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்திடவும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

16. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் குடிநீர் குழாய் பதிக்க வெட்டப்பட்ட பள்ளங்கள் மற்றும் சேதமடைந்த பள்ளங்களினால் வாகன ஓட்டிகளுக்கும் பாதசாரிகளுக்கும் பாதையில் கடந்து செல்ல மிகவும் சிரமமாகவும் மற்றும் வாகன விபத்துகள் ஏற்படும் அபாய நிலை உள்ளதனால் ஒட்டு பணி

செய்து சீரமைக்க வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

17. பவானி நகராட்சி வார்டு எண். 4 நகராட்சி உரக்கிடங்கில் உள்ள நுண் உர மையத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு 6.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 339 நாள்: 18.12.2018 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி | ரூ.600000 | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.39% |
| 2 | திருவாளர் ஆர்.என்.& கோ | ரூ.600000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.68% |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.39% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

18. பவானி நகராட்சி வார்டு எண். 11 மயானத்தில் உள்ள நுண் உர மையத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு 6.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 340, நாள்: 18.12.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி | ரூ.600000 | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.26% |
| 2 | திருவாளர் ஆர்.என்.& கோ | ரூ.600000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.52% |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.26% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

19. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20 அனுசுயா பிரசவ விடுதியில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு 2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற

தீர்மான எண்.          நாள்: 31.12.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். பாலசுப்பிரமணியன், | 2,00,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.43% |
| 2 | திரு. பி.ஏ. செல்லப்பன் | 2,00,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.93% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.43% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

20. இந்நகராட்சியின் சொத்துவரி பொதுசீராய்வு சிறப்பு அறிவிக்கைகளை அனைத்து வரிவிதிப்புகளுக்கும் இரண்டு பிரதிகளில் பிரிண்ட் எடுத்து வழங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பெயர் | படிவம் 1-க்கு தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பிரைட் டிசைன்ஸ் பவானி | 1.60 பைசா |
| 2 | ரமணா புக் ஸ்டோர்ஸ் & ஜெராக்ஸ், பவானி | 1.40 பைசா |
| 3 | சாய் ஜெராக்ஸ் & ஸ்டேஷனரி பவானி | 1.20 பைசா |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3-ல் உள்ள சாய் ஜெராக்ஸ் & ஸ்டேஷனரி பவானி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு அவசர அவசியத்தின் காரணமாக தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்ற் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு: (ந.க.எண்.1214/2018/அ1)

மன்றம் அனுமதிக்கலாம்

21.இந்நகராட்சியின் சொத்துவரி பொதுசீராய்வு அறிவிப்பு பேனர்கள் (Flex board) பவானி நகராட்சி பொது இடங்களில் வைக்க உள்ளூர் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பெயர் | Size | Copy | Total Sq.feet | Rate | Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரெயின்போ டிஜிட்டல், பவானி | 10x8 | 5 | 400 | 27 | 10800 |
| | | 4x2 | 1 | 8 | 20 | 160 |
| | | 2x 11/2 | 1 | 3 | 20 | 60 |
| 2 | மாடர்ன் பிரிண்டர்ஸ், ஈரோடு. | 10x8 | 5 | 400 | 30 | 12000 |
| | | 4x2 | 1 | 8 | 25 | 200 |
| | | 2x 11/2 | 1 | 3 | 33 | 100 |
| 3 | ராஜாமணி டிசைனிங் & பிரிண்டர்ஸ், ஈரோடு. | 10x8 | 5 | 400 | 32 | 12800 |
| | | 4x2 | 1 | 8 | 37 | 300 |
| | | 2x 11/2 | 1 | 3 | 50 | 150 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் உள்ள ரெயின்போ டிஜிட்டல், பவானி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு அவசர அவசியத்தின் காரணமாக தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு: (ந.க.எண்.1214/2018/அ1)
மன்றம் அனுமதிக்கலாம்

22. பவானி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் "B" பிரிவு அங்கீகாரம் வரும் 16.04.2019-ல் மூன்றாண்டு காலம் முடிவடைகிறது.

எனவே, மேற்படி பேருந்து நிலையத்தின் அங்கீகாரத்தினை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு 17.04.2019 முதல் 16.04.2022 வரை புதுப்பிக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலர், ஈரோடு அவர்களின் அங்கீகாரம் பெறுவதற்காக மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு:
அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.174 /2016/அ2)

23. பவானி நகராட்சிக்கு மூலதன மானிய நிதி 2018-19 ன் கீழ் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல் பணி மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் சீரமைப்பு செய்தல் பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. இப்பணிகளில் கூடுதலாக சில பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

24. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள குப்பைக் கிடங்கில் CCTV கேமரா பொருத்தி கண்காணிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

25. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் பெயர் பலகைகள் நிறுவப்பட்டுள்ளது. சில தெருக்களில் உள்ள பெயர் பலகைகளில் உள்ள Stickerகள் பழுதுபட்டுள்ளது. இதனை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.45,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

26. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள முக்கிய பிரதான மழைநீர் கால்வாய்களில் சேறு படிந்து கால்வாயின் உயரத்தை குறைத்துள்ளதனால் மழைநீர் கால்வாயில் நிறைந்துவழிந்து வீடுகளுக்குள்ளும், சாலைகளிலும் செல்கின்றதனால் பொது மக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது. எனவே கால்வாயில் உள்ள சேற்றினை அகற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

27. பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி பிரிண்டர்களில் உள்ள Toner கள் Refilling செய்யவும், சிறுபழுதுகள் பழுது பார்க்கவும், வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தே செலவுத் தொகை ரூ. 5000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

28. பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 1 சொக்கராயன் காடு பகுதியில் உள்ள தெருக்களுக்கு சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செய்திடவும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

29. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தென்புறம் சின்னப்பா லே அவுட் சாலையினை இணைக்கும் மண் சாலையினை தார் தளம் கொண்டு அமைக்க ரூ.2.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ளவும், இச்செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

30. பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 7 திருவள்ளுவர் நகரில் குடியிருப்புகள் அதிகம் நிறைந்த பகுதியில் மழைநீர் வடிகால் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/- ஆகும். மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்றிடவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

31. பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 13 பசுவேஸ்வரர் வீதியில் மழைநீர் வடிகால் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,80,000/- ஆகும். மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்றிடவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

32. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 7 திருவள்ளுவர் நகரில் உள்ள பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,000/- ஆகும். மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி நிறைவேற்றிடவும், இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

33. உயர்நீதி மன்ற வழக்கு எண். WP. No. 29852/2017-ல் பவானி கிராமம், சர்வே எண்.825/ வார்டு பி, பிளாக் எண்.7, ரீ சர்வே எண். 82-ல் ( பாவடி) சாலை என நகரளவை பதிவேடுகளில் உள்ள இடத்திற்கு கிழபுறம் பாதையாக உள்ள இடத்திற்கு அருகில் உள்ள மாகராஜா என்பவர் பாதை இடத்தினை பாவடி சம்பந்தப்பட்ட சமூகத்தார் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் வழக்கில் உள்ள பிரதிவாதிகள் எந்த இடையூறும் செய்யக்கூடாது என வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு உயர்நீதி மன்ற வழக்கறிஞர் பி. ஸ்ரீனிவாஸ் அவர்கள் உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P. No. 29852/2017/ற்கு நீதி மன்றத்தில் நகராட்சியின் சார்பில் ஆஜராகவும், Counter Affidavit தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/- வழங்குமாறு தனது கடிதம் 6/12/2018ன்படி தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட தொகையினை அவருக்கு வழங்க ரூ.15,000/- வழக்காடு கட்டணத்தை வழங்க ஒப்புதல் வேண்டி மன்றபொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.168/2018/எப்1)

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

34 இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையம், பேருந்து நுழைவு கட்டண ரசீது 150 புத்தகங்கள் (100 எண்ணிக்கை) அச்சடித்து வழங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பெயர் | புத்தகம் 1-க்கு தொகை |
|---|---|---|
| 1 | பிரைட் டிசைனர்ஸ் & கிராபிக்ஸ் பவானி | ரூ.32.00 |
| 2 | லட்சுமி, ஆப்செட் பிரிண்டர்ஸ், பவானி | ரூ.35.50 |
| 3 | சன் கிராபிக்ஸ், பவானி | ரூ.36.00 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் உள்ள பிரைட் டிசைனர்ஸ் & கிராபிக்ஸ் பவானி அச்சகம் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட அச்சகத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கும், செலவுத் தொகை ரூ.5000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு: (ந.க.எண்.1214/2018/அ1)

மன்றம் அனுமதிக்கலாம்.

35.பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க நோய்தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.347 நாள்: 31.12.2018 மூலம் நகர்மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இப்பணிக்கு இந்நகராட்சிக்கென 35 Domestic Breeding Checkers பணியாளர்களை அயற்பணி ஒப்படைப்பு ( Outssourcing Basios) முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 11701/2018/ ஜி2 நாள்: 23.07.2018-ன் படி Unskilled labour - Mazdoor Category -II ன்படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.312/- வீதம் கூலியாக வழங்கிட தெரிவித்துள்ளார்கள். மேற்படி ஊதிய விகிதத்தில் 35 பணியாளர்களை 74 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு ( Outsourcing Basis ) முறையில் பணி மேற்கொள்ள கீழ்காணும் முறையில் செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண். | விபரம் | தொகை ( ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.312/- வீதம் 82 வேலை நாட்களுக்கு 312 x74x35 | 8,08,080 |
| 2 | EPF 13% | 105050 |
| 3 | ESI 4.75% | 38384 |
| 4 | Administrative Expenses 5% | 40,404 |
| | Total | 9,91,918 |
| | Rounded Off | 9,92,000 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண். 1819/2016/எல்3, நாள்: 08.11.2016-ன்படி EPF and MP Act 1952-ற்கு இணங்கிட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்டுள்ள விபரப்படி பணியாளர்களுக்கு EPF and MP Act 1952 ESI Act 1948 ன் படி மேற்கண்டவாறு செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே 01.04.2019 முதல் 74 வேலை நாட்களுக்கு மேற்காணும் செலவினத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outs sourcing Basis) முறையில் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 219/2017/எச்1)

36 பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN36D4020 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு கொள்ள ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண். 38 நாள்: 28.02.2018.ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் 29.01.2019 ஆம் தேதியில் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் 63, வைரபாளையம் நால்ரோடு, ஈரோடு. | - | ரூ.29500/- |
| 2. ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், 26, செங்கோட்டையா நகர், வைரபாளையம், ஈரோடு. | - | ரூ.29750/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்க ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம்